MISSION PRESS 1840
PONDICHERRY

# சர்வவியாபி

SARVA VIABI

ESTD:1.3.1907
(Year-115)

04-04-2021 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | 1 | சார்வரி வருடம் (பங்குனி 22) | வருட சந்தா ₹ 150 | தனிப்பிரதி ₹ 6

புத்தகம் 58 | இதழ் 14 | பக்கம்-12
e-mail:missionpress48@gmail.com
e-mail:missionpress48@yahoo.com
Ph: 0413/ 2334360
ஆசிரியர் : பேரருள்பணி ஆ.அருளானந்தம்
துணை ஆசிரியர் : அருள்பணி இர.ஜெயந்த் ராயன்

## இயேசு உயிர்த்தார் அல்லேலூயா!

உயிர்த்த நம் இறைவன்
நம்மைத் தேடி வந்தார்.
நம் நம்பிக்கை பலமாக!
நம் உறவுகள் வளமாக!
நற்செய்தி நம் வாழ்வாக!
உயிர்த்த ஆண்டவர் அருளுகின்ற
அமைதியும், சமாதானமும் என்றும்
உங்களோடு இருப்பதாக.

– ஆசிரியர்.



## பிறந்த நாள் வாழ்த்துக்கள்

07-04-2021



அன்று பிறந்த நாள் காணும் நம்
புதுவை-கடலூர் உயர் மறைமாநிலத்தின்
அப்போஸ்த-க்கப் பரிபாலகர்
**மேதகு ஆயர் அந்தோணிசாமி பீட்டர் அபீர்**
அவர்களுக்கு, உயர் மறைமாநிலத்தின் மேனாள்
பேராயர் அந்தோணி ஆனந்தராயர்,
குருக்கள், இருபால் துறவியர் மற்றும்
இறைமக்கள் சார்பாக வாழ்த்துக்களையும்
செபங்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

– ஆசிரியர்.

ஆசிரியர் பேனா...

# சிந்தையிலே தெளிவு வேண்டும்

மக்களின் அன்றாட வாழ்வில் அரசியல் முக்கியப் பங்காற்றுகிறது. அரசியல் என்றால் முடிவெடுத்து செயல்படுத்தும் திறன் என்று புரிந்து கொள்ளலாம். முடிவெடுக்கின்ற திறன் யாரிடத்தில் இருக்கின்றதோ அவரே ஆட்சி செய்யும் அதிகாரம் பெற்றவர். மக்களாட்சி நடைமுறையில் ஆட்சி, அதிகாரத்தை மக்கள் தங்கள் பிரதிநிதிகளிடம் கொடுத்து, தங்கள் அமைதியான, வளமையான வாழ்வுக்கு வழிகாட்டிகளாக இருக்கச் செய்கின்றனர். இந்த ஆட்சி, அதிகாரம் மக்களை அடிமைப்படுத்துவதற்காக அல்ல; மக்களின் சுதந்திரத்தையும், உரிமையையும் காப்பதற்குக் கொடுக்கப்பட்ட வாய்ப்பு. இதனைப் பிரதிபலன் எதிர்நோக்காத சேவை என்று பெருமைப்படுத்துகின்றோம்.

மக்கள் பிரதிநிதிகள் எத்தகையவாராக இருக்க வேண்டும் என்பதில் இத்தேர்த-ன்போது நாம் கவனமுடன் செயல்பட வேண்டும். இத்தேர்த-ல் நம் கவனக் குறைவு சுதந்திரத்தையும், உரிமைகளையும் இழக்க வழிவகுத்துவிடும் என்று பேசப்படுகிறது. எனவே பொறுப்புள்ள நல்ல பிரதிநிதிகளை நாம் தேர்ந்தெடுக்க வேண்டியது நமது ஜனநாயகக் கடமை.

மக்கள் பிரதிநிதிகளாக இருக்க தேர்வு செய்யப்படுவோரின் குணநலன்களைத் திருவிவி-யம், விடுதலைப்பயண நூல் 18:21-23 நமக்கு நினைவூட்டுகிறது. மக்கள் அனைவரிலும் திறமையும், இறையச்சமும் நாணயமும் கொண்டு கையூட்டை வெறுக்கும் பண்பாளரைக் கண்டுபிடியும். அவர்கள் எப்பொழுதும் மக்களுக்கு நீதி வழங்கட்டும். இத்தகையோரை தேர்வு செய்வதில் நாம் அறிவுடைமையோடு (வீரமுடன்) செயல்பட வேண்டும். தொடுவுணர்வு, சுவைத்தறிவு, முகர்ந்தறிவு, காணுதல், கேட்டறிதல் ஆகிய ஐந்தறிவோடு கடவுள் சிந்தித்தறிதல் என்ற திறமையையும் கொடுத்திருப்பதாக தொல்காப்பியம் 1526-1532 உரைக்கின்றது (தினமணி 19-01-2021, சா.பன்னீர்செல்வம், அறிவிய-ன் முன்னோடியாகும் தமிழ்) திருவிவி-யம் சீராக் புத்தகம் 17:5 இன்னும் கடவுள் நமக்கு கொடுத்திருக்கும் பகுத்தறிவைப் பற்றி நினைவூட்டுகிறது. "தம் ஐந்தறிவைப் பயன்படுத்தும் உரிமையை ஆண்டவர் அவர்களுக்கு அளித்தார்; ஆறாவதாகத் தம் அறிவுத்திறனில் பங்கு கொடுத்தார்; அந்த ஆறறிவையும் விளக்கும் பகுத்தறிவை ஏழாவது கொடையாக வழங்கினர்."

ஓட்டுக்களை கவர ஒவ்வொரு கட்சியும், தம் பரப்புரையில் சொல்பவற்றை பகுத்தறிவைக் கொண்டு புடம் போட்டுப் பார்க்க நம் சிந்தனையில் தெளிவு வேண்டும். இதனைத் திருவள்ளுவர்

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு" (குறள் 423)

என்று எச்சரிக்கின்றார். பகுத்தறிவுச் சிந்தனையில் ஊறியவர்கள் தமிழர்கள் என்பதை நிரூபிக்கச் சிறந்த வாய்ப்பு இத்தேர்தல். 'மயிரிழப்பின் உயிர் இழக்கும் கவரிமான்போல, மானம் இழப்பின் உயிர் நீப்பவன் தமிழன்' என்பது தமிழர் வரலாறு. தன்னுரிமையை விட்டுக் கொடுக்காதிருப்பது மனிதனின் உண்மையான பண்பு. "உன்னிடம் உயிர் உள்ளவரை மூச்சு இருக்கும் வரை, மற்றவர்கள் உன்மீது அதிகாரம் செலுத்தவிடாதே" (சீராக்.33:21).

பொருளாதாரம் வீழ்ச்சியுற்றிருக்கும் இக்காலத்தில் ஆட்சிக்கு வந்தால் இலவசங்களையும், சலுகைகளையும் கொடுப்போம் என்று பரப்புரை செய்யப்படுவதை பகுத்தறிவோடு சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். இலவசங்கள் வேண்டாம் பிழைப்புக்கான வழியைக் காட்டுங்கள். வேலைக்கான ஊதியம் வழங்குங்கள் என்று சொல்ல வீரம் நமக்கு வேண்டும். வீரம் என்றால் அறிவுடைமையோடு செயல்படுவது என்று பொருள்படும். இலவசங்களைக் கொடுக்க முன் வருபவர்கள், ஏன் சிறு குறு தொழில்களையும், குடிசைத் தொழில்களையும், மண் சார்ந்த தொழில்களையும் ஊக்குவிக்க உறுதியளிப்பதில்லை என்று சிந்திக்கும் தெளிவு நமக்கு வேண்டும். தமிழினமாக, சகோதர, சகோதரிகளாக ஒற்றுமையில் வாழ்ந்து வரும் நம்மை, சாதி, மதம் சொல்- பிரித்து ஆட்சி, அதிகாரத்தை நம்மிடமிருந்து பறித்துக்கொள்ள முனைப்புடன் செயல்படும் கட்சியினரை புறம் தள்ளும் அறிவுத் தெளிவை இப்போது நாம் பயன்படுத்த தவறக்கூடாது.

சாமிக்கும் சாயம் போட்டு கரைப்படுத்தி கட்சியின் ஆதாயத்திற்காக பயன்படுத்தும் போ- ஆன்மிகத்தில் மயங்கிவிட வேண்டாம். ஆன்மிகம், மத அடையாளம் அல்ல; மனத்தூய்மையுடன் முன்நிற்கும் மனிதனில் கடவுளைப் பார்ப்பது. ஆறறிவோடும் ஏழாவதாக கடவுள் நமக்குத் தந்திருக்கும் ஏழாவது அறிவை, பகுத்தறிவை பயன்படுத்தும் கட்டாயம் நமக்கு ஏற்பட்டுள்ளது. வஞ்சகர்களின் பசப்பு வார்த்தையிலே மதியிழக்காமல் செயல்பட விழித்திருப்போம். நம் சாதி, நம் மதம், நம் சொந்தம் என்று பாராமல் திறமையும், இறையச்சமும், நாணயமும் (நேர்மை) கொண்ட, கையூட்டை வெறுக்கின்ற யாராக இருந்தாலும் அவரைத் தேர்வு செய்வோம். எச்சரிக்கை! இத்தகைய பண்பு கொண்டவர் எந்தக் கட்சியில் இருக்கின்றார் என்பதைக் கவனிக்க மறக்க வேண்டாம்.

நல்லவராக, நம்மவராக இருந்தாலும், அவர் சார்ந்திருக்கும் கட்சி, அணியை மீறி அவரால் செயல்பட முடியாது என்பது உண்மை. கொள்கை வேறு, கூட்டணி வேறு என்று சொல்- கூட்டணியிலே கொள்கையை விட்டுக்கொடுத்து ஆதாயம் தேடும் கட்சிகள் இல்லை என்று சொல்ல வாய்ப்பு இல்லை. எனவே மக்களின் உணர்வுகளை மதித்து, தேவைகளை நிவர்த்தி செய்து, உரிமைகளை (வாழ்வுரிமை, கருத்துரிமை, சமய உரிமை போன்றவை) பாதுகாக்கின்ற கட்சியினரை, கூட்டணியை தேர்ந்தெடுக்கும் சிந்தனைத் தெளிவு பெறுவோம்.

ஓட்டுப்போடும் 18 வயது நிரம்பிய ஒவ்வொருவரும், அவரவர்கள் நிலையில் கடந்த ஆண்டுகளிலே பட்ட துன்பங்கள், சந்தித்த இடர்கள், அனுபவித்த வேதனைகள், இழந்த உரிமைகளை இப்போது ஒருமுறை உணர்வுப்பூர்வமாக அனுபவித்து உங்கள் சுட்டுவிரல் சரியான பொத்தானை அழுத்த அனுமதியுங்கள். நல்லவர்களை, நமக்கு நல்லாட்சி தருபவர்களை தேர்வு செய்ய கையூட்டு வேண்டாம். பணத்திற்காகவும், பதவிக்காகவும் மக்களை தனியாருக்கு விற்கத் துடிப்பவர்களை புறம்தள்ளுவோம்.

"மண்ணுலகின் அதிகாரம் ஆண்டவரின் கையில் உள்ளது, ஏற்றத் தலைவரைத் தக்க நேரத்தில் அவரே எழுப்புகிறார்" (சீராக்.10:4) இந்தக் கடவுள் நம்பிக்கையோடும் தெளிந்த அறிவோடும் தேர்தலைச் சந்திப்போம். அடிமைநிலை அழித்து உரிமை வாழ்வு வழங்குபவர் கடவுள். கடவுளை நமக்கு வெளிப்படுத்திய இயேசுவின் பாடுகள் நமக்கு வ-மையளிக்கட்டும், அவரின் உயிர்த்தெழுதல் நம்மை ஒன்றுபட்ட புதிய மக்களினமாக்கட்டும். ஆன்மிக பலத்துடன் சுதந்திரமக்களாக வாழ்வோம், உயிர்த்த இயேசுவின் அருள் ஒளியாகட்டும்! நாம் உயிர்த்த ஆண்டவரின் வழிநடப்போம்.



# பெறுவோம் இறைவனின் இரக்கத்தை...

அருள்திரு. P. சின்னப்பன்
உதவி பங்குத்தந்தை, இருப்புக்குறிச்சி.



திப.4:32-35 1யோவா.5:1-6 யோவான் 20:19-31 11-4-2021

"மனிதன் நித்தம் கல்லானது ஏனோ - இறைவா
மனித மீட்புக்காய் நின்னுயிர் தந்தும் நம்ப மறுக்கிறதே
பாவம் போக்க இறந்து மூன்றாம் நாள் உயிர்த்தும்
யூத மக்களுக்கு அஞ்சி கதவடைத்த சீடர்கள் போல...
நின் அருள் தாராயோ, ஐயம் நீக்கி நம்பிக்கை கொள்ள"

அன்பார்ந்தவர்களே, பாஸ்கா காலத்தின் இரண்டாம் ஞாயிறு இறை இரக்கத்தின் ஞாயிறு என்று கொண்டாடப்படுகிறது.

**வரலாற்றுப் பின்னணி:** 1930-ம் ஆண்டு இயேசு கிறிஸ்து தன்னை போலந்து நாட்டு அருள்சகோதரி (Sr.Faustina) ஃபாஸ்டினாவுக்கு வெளிப்படுத்தி இறை இரக்கத்தின் பக்தியை உலகறியப் பணித்தார். 2000-ம் ஆண்டு மே-1 அன்று மறைந்த திருத்தந்தை புனித ஜான்பால்-II அவர்கள் அருள்சகோதரியை புனிதர் நிலைக்கு உயர்த்தினார். இவ்வாறு இரக்கத்தின் ஆண்டவர் அருள்சகோதரிக்கு அருளிய தனிப்பட்ட இறைவெளிப்பாட்டின் விளைவாகவும் இறைவனின் அளவற்ற இரக்கத்தை நினைத்து நன்றி கூறவும் இஞ்ஞாயிறு கொண்டாடப்படுகிறது.

**இறை இரக்கத்தின் ஆண்டவரின் திருவுருவம் கூறும் செய்தி:**

இரக்கத்தின் முழு வடிவாக விளங்கும் இயேசுவின் இதயத்தி-ருந்து வெளியேறும், இயேசுவின் இரத்தமாக விளங்கும் சிவப்புக் கதிர் - ஆன்மாக்களின் வாழ்வையும், நீராக விளங்கும் வெள்ளைக் கதிர் ஆன்மாக்களின் தீர்வையும் குறிக்கின்றது. இவ்வாறு இறை அன்பு, மன்னிப்பின் அடையாளமாக இறைஇரக்கத்தின் ஊற்றாக இந்தத் திருவுருவம் விளங்குகிறது.

**இறை இரக்கத்தைப் பெற:** இறைவனின் அளவில்லா இரக்கத்தைப் பெற, இந்த நாளில் நற்கருணை கொண்டாட்டம், ஒப்புரவு, நற்கருணை சந்திப்பு, இறை இரக்கத்தின் செபமாலை போன்ற பக்திமுயற்சிகளை பக்தியோடு அனுசரிக்கும்போது தூய ஆவியாரின் திடப்படுத்தும் கொடைகளையும், நாம் நம்முடைய பாவங்களி-ருந்து கழுவப்பட்டு, பரிபூரண பலன்களையும் இறைவனின் அளவில்லாத இரக்கத்தையும் அருள்சாதன முறையில் பெற முடியும்.

**வாசகங்கள் விடுக்கும் அழைப்பு:** நாம் வாழ்வு பெற, அதுவும் நிலைவாழ்வு பெற, அதிலும் நிரந்தரமாகப் பெற, கண்டு அல்ல மாறாக காணாமல் நம்பிக்கை கொண்டு வாழ நற்செய்தி வாசகம் அழைப்பு விடுக்கின்றது.

நாம் கடவுளிடமிருந்து பிறந்தவர்கள். கடவுளை அன்பு செய்கிறோம் என்பதை நாம் எந்த அளவிற்கு கடவுளின் மீது நம்பிக்கை கொண்டு, அவரது கட்டளைகளைக் கடைபிடிக்கிறோம் என்பதில் அடங்கியுள்ளது என்று இரண்டாம் வாசகம் தெளிவுபடுத்துகின்றது.

நம்பிக்கை கொண்ட மக்கள் அனைவரும் ஒரே உள்ளமும், ஒரே உயிருமாய் இருந்து தங்களின் உடைமைகளைப் பொதுவாகக் கருதி, பகிர்ந்து பல்லுயிர் காத்து, இயேசுவின் உயிர்ப்புக்குச் சான்று பகர்ந்து வாழ்ந்ததை முதல் வாசகமும் நமக்கு எடுத்துரைக்கின்றது.

**இன்றைய நற்செய்தியில் இயேசு:**

- யூதர்களுக்கு அஞ்சிச் சீடர்கள் தாங்கள் இருந்த இடத்தின் கதவுகளை மூடிவைத்திருந்த நிலையில் அவர்களுக்கு வேண்டிய அமைதியை அளிக்கிறார்.
- தூய ஆவியை கொடுத்து மன்னிப்பதற்கான அதிகாரத்தை அளித்து திருத்தூதர்களாக, அப்போஸ்தர்களாக (அனுப்பப்பட்டவர்கள்) நியமிக்கிறார்.
- இறைவனின் இரக்கத்தைப் பெற சீடர்களுக்கு குறிப்பாக, தோமாவிற்கு நம்பிக்கையை ஊட்டுகிறார்.

சீடர்களைப் போல் இறைவனின் பேரிரக்கத்தைப் பெற இறையன்பு, இறை நம்பிக்கை மிக மிக அவசியம் என்பதை நாம் உணர வேண்டும். குறிப்பாக இவை இரண்டையும் நாம் புனித தோமாவிடம் கற்றுக்கொள்ள வேண்டும்.

**இறையன்பு:** இறந்துபோன இலாசரை உயிர்ப்பிக்க, யூதேயாவுக்குப் போவோம் என்று சொல்ல, சீடர்கள் இயேசுவிடம் அங்குச் சென்றால் யூதர்கள் மீண்டும் கல்லெறிவார்கள் என்று எச்சரிக்க, திதிம் என்னும் தோமா, "நாமும் செல்வோம், அவரோடு இறப்போம்" என்று மற்றச் சீடர்களும் நம்புவதற்கு ஒரு வாய்ப்பு அளிக்க தோமாவும் காரணமாகிறார். இயேசுவை முழுமையாக அன்பு செய்பவர்களால் மட்டுமே இயேசுவோடு இருக்கவும் இயேசுவுக்காக உயிர்த் தியாகம் செய்யவும் துணிவார்கள். இயேசுவின் காய வடுக்களில் தம் விரல் இட்டுப் பார்க்க மட்டுமே நினைத்த தோமா, நம் மண்ணில் வந்து, இரத்தம் சிந்த வைத்தது அவருடைய அன்பு மட்டுமே தவிர, சந்தேகம் அல்ல.

**இறை நம்பிக்கை:** 'திதிம்' என்றால் இரட்டை அல்லது இரட்டைத் தன்மை என்று அர்த்தம். தோமா ஏன் அவ்வாறு அழைக்கப்பட்டார்? அவர் இரட்டையரா? அல்லது இரட்டைத் தன்மை கொண்டவரா? ஒரு பக்கம் இயேசுவின் மீது நம்பிக்கையும் மறுபக்கம் ஐயமும் கொண்டிருந்தாரே? 'ஐயமுறும் தோமா' என்று அடைமொழி கொண்டு அழைக்கப்பட்டது ஏன்? தோமா மட்டும்தான் இரட்டைத் தன்மை கொண்டிருந்தாரா? மற்றச் சீடர்களும் இரட்டைத் தன்மை கொண்டிருக்கவில்லையா? இயேசுவோடு இருக்கவும் இறக்கவும் துணிந்த மற்றச் சீடர்களும் அவரை மறுத-க்கவில்லையா? காட்டிக்கொடுக்கவில்லையா? அவரை விட்டு ஓடி மறையவில்லை? இது இரட்டைத் தன்மை இல்லையா? இவையெல்லாம் விசுவாசத் தேட-ல் ஏற்படும் குறைபாடுகள். வெறும் எதிர்மறையான ஐயம் மட்டுமே என்று எண்ணிவிட முடியாது. இந்த விசுவாசத் தேடல் உயிரை அளிப்பதில் முடிவடைகிறது. என் ''ஆண்டவரே என் தேவனே'' என்று முழுமையான சரணடைதலை வெளிப்படுத்துகிறது.

**நம் வாழ்வில்:** நாம் கத்தோ-க்க குடும்பத்தில் பிறந்ததால், தினமும் திருப்ப-க்கு செல்வதால், பக்தி முயற்சிகளில் ஈடுபடுவதால் மட்டுமே இறைவனின் அளவில்லா இரக்கத்தைப் பெற முடியுமோ? இறைவனின் கட்டளைகளைக் கடைப்பிடிப்பதன் வாயிலாக நாம் இறைவனை அன்பு செய்து, இறைவனில் நாம் முழுமையாகச் சரணடையும் போது இறைவனின் அளவில்லா இரக்கத்தை முழுமையாகச் சுவைக்க முடியும்.

"இயேசுவே! உம்மில் என் முழு நம்பிக்கையையும் வைக்கிறேன்"



# உயிர்ப்பின் திருப்பலி

– சுவாமி ஆ. லூயிஸ்.

உயிர்ப்பு இல்லையேல் கிறிஸ்தவம் இல்லை. உயிர்ப்பே நமது அடித்தளம். நம் கடவுள் இறந்தோரின் கடவுள் அல்ல, வாழ்வோரின் கடவுளாவார். "இருக்கின்றவர் நாமே" என்று உறுதிப்படுத்தி, உலக முடிவு வரை உயிர்த்த ஆண்டவர் நம்மோடு இருக்கிறார் என்று அல்லேலூயா பாடுவோம். முழுமையின் அடையாளமான ஏழு ஞாயிறு உயிர்த்த ஆண்டவர் படைப்பையும், மனிதத்தையும், திருச்சபையையும் பலப்படுத்தி உடன்பயணம் செய்கின்றார் என்று மகிழ்வோம்.

**உயிர்ப்பின் ஞாயிறு:** கல்லறையினின்று உயிர்த்த ஆண்டவர் நம்மைவிட்டுப் பிரிவதில்லை. அடக்கத்தோடு அவர் கதை முடிந்தது என்று எண்ணிய மக்களுக்கு, புனித மரிய மதலேன் உயிர்ப்பின் முதல் தூதுவராக புது வரலாற்றை ஆரம்பித்து வைக்கின்றார் என்று புகழ்பாடுவோம். இறைவன் என்னை உயிர்த்தெழச் செய்தார். 'உயிர்த்த என் இறைவன் எனைத் தேடி வந்தார், என் நம்பிக்கை பலமானது, ஒருபோதும் இனி நான் பயங்கொள்ளமாட்டேன், ஆண்டவரின் அடிதொட்டு நடப்பேன், என் ஆண்டவரே, என் தேவனே நீரே என் கடவுள்' என்று புனித தோமையாருடன் நமது நாடு நம்பிக்கையோடு பயணிப்பதாக.

உயிர்ப்பின் மகிழ்வைக் கொண்டாடுவோம். சீடர்கள் இயேசுவை தரிசித்தபோது மிகவும் மகிழ்ந்தனர். முதல் கிறிஸ்தவர்களும் உயிர்த்த ஆண்டவரில் நம்பிக்கையைப் பலப்படுத்திக் கொண்டனர். பிறந்த குழந்தைகளைப்போல தாகத்தோடு உயிர்ப்பின் அமுதமானப் பாலைப் பருகினர்.

நமது வாழ்க்கைப் பயணத்தில் இயேசு நம்மோடு இருக்கின்றார். நம்மை நேரிய வாழ்க்கைப் பாதையில் பயணிக்க அருள்புரிந்தார். திருவிருந்து வழியாக உயிர்த்த ஆண்டவர் நம்முடன் இருக்கின்றார்.

இயேசு ஒரு நல்ல ஆயனாக நமக்கிருக்கின்றார். எனவே ஆர்ப்பரிப்போம் ஆனந்திப்போம். நமது பிரமாணிக்கமான காவலராக இருக்கின்றார். நம்மை தன்னோடு இருக்க அன்போடு அழைக்கின்றார்.

இயேசு நம்மையும் அவரைப்போல அரசக் குருத்துவத்தில் பங்கெடுக்க அருள்புரிகின்றார். இயேசுவோடு ஒன்றித்து நாம் ஒப்புக்கொடுக்கும் ஞானப்பலி இறைவனுக்கு நமது காணிக்கையாக அமைகிறது என நம்புவோம். மெய்மையின் சாட்சிகளாய் நாம் திருச்சபையில் திகழ அழைக்கப்படுகின்றோம். இவ்வாறு இன்றைய உலகில் திருச்சபை உண்மைக்குச் சான்று பகர்ந்து, சாட்சிகளாய் விளங்குகின்றது என்று உணர்வோம். ஆண்டவருடைய விண்ணேற்பு நமக்குள் நம்பிக்கையை வளர்த்தெடுக்கின்றது. நாமும் அவரைத் தொடர்ந்து விண்ணகத்தில் கடவுள் தந்தையுடன் இருப்போம் என்ற நற்செய்தியை நம்மில் பதிய வைக்கின்றது.

இயேசு கிறிஸ்து ஆவியில் செபித்தது போல இறைவனைப் புகழ்ந்தது போல திருச்சபையும் புகழ்கின்றது. நாம் அல்ல நம்மில் இருக்கும் ஆவியானவர்தான் செபிக்கின்றார் என்ற உணர்வை வளர்த்தெடுப்போம். திருப்பலியில் ஆவியார் நம்மோடு, நம்மில் செயல்படுகின்றார் என்று நம்புவோம்.

தூய ஆவியின் பொழிவு நம்மை ஆர்வமுள்ளத் திருச்சமூகமாக பாதுகாத்து வளர்த்து வருகின்றது. ஆவியின் அருள் அடையாளமாய் உலகிற்கு அமைதியையும் மகிழ்வையும், மன்னிப்பையும் திருச்சபை பகிர்ந்துகொண்டு வருகின்றது. நிறைவாக மூவொரு இறைவனில் வளரும், சான்று பகரும் திருச்சபையாக நாம் விளங்க அழைக்கப்படுகிறோம். ஆண்டவரின் அருளும், இறைவனின் அன்பும், தூய தோழமையும் நம்மோடு இருப்பதாக.

முடிவில்லாத வாழ்வுக்கு இயேசு தனது உடலையும் இரத்தத்தையும் கொடுத்தது மிகப்பெரிய வரமாகும் என்பதை என்றும் உணர்வோம், உயர்வோம். பாலைவனத்தில் இறைமக்களுக்கு உணவும் நீரும் அருளினார். திருப்பலியில் இயேசு வழங்கும் விருந்து உலகையும் நம்மையும் வாழவைத்துக் கொண்டிருக்கிறது என்று நமது நம்பிக்கையை நாளும் பலப்படுத்துவோம்.

இதயத்தில் சாந்தமும் தாழ்ச்சியும் நிறைந்த இயேசு தமது இதயத்தை நமக்கு அளிப்பது மிகவும் பயன்மிக்கதாகும். இறப்பிலிருந்தும் பசியிலிருந்தும் இயேசு இறைவனின் பிள்ளைகளுக்கு உணவளிப்பது கடவுளின் கருணையாகும். நமது இதயம் இயேசுவின் இதயமாக, மரியாவின் மாசற்ற இதயமாக இருப்பதாக!

**உயிர்ப்பின் உயர்வு:** மனிதர்கள் பிறக்கின்றார்கள், எப்படியோ வாழ்கின்றனர். ஒரு நாள் உயிர் உடலைவிட்டுப் பிரிகிறது என்பது மனித மரபாக இருந்தது. இதற்கு ஒரு விடுதலை வாழ்வை வழங்க இறைவன் விரும்பி மகன் இயேசு வழியாகத் திட்டமிட்டார். இறப்பு வாழ்வாகும் என்று இயேசு தன் உயிர்ப்பு வழி மனிதகுலம் இறைவனோடு இருக்க இயலும் என்ற நம்பிக்கையின் நாயகனாய் விளங்கி வருகிறார். இறைவனிடம் இறப்பு இல்லை, அப்படியே அவருடைய சாயலாகப் படைக்கப்பட்ட மனித குலத்திற்கும் இறப்பில்லை என்ற விடுதலைச் செய்தியை நமக்கு வழங்குகிறார்.

உயிர்ப்பின் நற்செய்தியை புனித மதலேன் மரியா எவ்வாறு அனுபவித்து அறிக்கையிட்டார் என்று நற்செய்தி நமக்குத் தெளிவுபடுத்துகின்றது. யூதர்கள், வீரர்கள் அனைவரும் இயேசுவின் அடக்கத்தோடு அனைத்தும் முடிந்தது என்று நினைத்தனர், காவலும் கல்லறைக்குப் போடப்பட்டது. ஆனால் நடந்தது உயிர்ப்பு என்பதை ஏற்க இதயமில்லாதிருப்பினும், இயேசு உயிர்ப்பின் வழியாக அவர் நம்மோடு இருக்கிறார் என்பதை நாற்பது நாட்களும் தனது தரிசனத்தைத் தந்து நம்பிக்கையைப் பலப்படுத்துகிறார்.

இயேசுவின் உயிர்த்தெழுதலே திருச்சபையின் ஆரம்பமாக அடித்தளமாக அமைந்தது. அதைத்தான் இன்று உலகம் முழுவதும் கிறிஸ்தவக் குழுக்கள், சமூகங்கள் அறிக்கையிட்டு சான்று பகர்ந்து வருகின்றன. இவ்வுலக மாயை நம்மை மயக்கி திசைத்திருப்பி இறைவனிடமிருந்து பிரித்து ஆள எப்போதும் முயற்சிக்கின்றது. இவைகள் அனைத்தையும் இயேசு உயிர்ப்பின் வழியாக மேற்கொள்ள கடவுள் அருள் பொழிகின்றார். கடவுளுடைய குழந்தைகள் எம்மதத்தில் இருந்தாலும், எந்த நாட்டில் இருந்தாலும், யாராக இருப்பினும் ஆன்மா வெற்றி பெறவே கடவுள் அழைக்கின்றார், ஏனெனில் நாம் எல்லாருமே அவருடைய சாயலாகப் படைக்கப்பட்டவர்கள். தற்காலிகமான உடல் நிரந்தரமான ஆன்மாவை தனக்குப் பணிய வைக்க முயன்றாலும், நாம் சுதந்திரமாக உணர்ந்து வாழ முயல்வோம்.

ஒவ்வொரு திருப்பலியிலும் நாம் முழுமையாக பங்கெடுக்கின்றபோது, உயிர்த்த ஆண்டவரின் அனுபவத்தில் நம் வாழ்வின் தேவைகள் எல்லாம் நிறைவேறுகின்றன. கவலையின்றி களிப்போடு வாழ, வாழ வைக்க திருப்பலி நம்மை மிகச் சிறந்த முறையில் உருவாக்குகின்றது. எனவேதான் உயிர்த்த ஆண்டவர் நீயும் என்னைப் போல வாழ மாட்டாயா? என்று பரிவோடு அழைப்பதற்கு நன்றி கூறி நலமுடன் வாழ்வோம், பகிர்வோம், உயிர்த்தெழுவோம்.

**உயிர்ப்புப் பெருவிழாவை முன்னிட்டு அடுத்த இதழ் 18-04-2021 தேதியிட்டு வெளிவரும்.**

– ஆசிரியர்.



# வசந்தமாய் வாழ்வு

–அருள்பணி. **M. ஜான் கென்னடி,** துணை முதல்வர்,
தூய வளனார் மேல்நிலைப்பள்ளி, திருப்பாப்புலியூர், கடலூர்.

## 32. புலனடக்கம்

மகா அலெக்ஸாண்டர் காலத்தில் புகழ்பெற்ற கிரேக்க தத்துவஞானி டயோஜனிஸ் என்பவர் வாழ்ந்து வந்தார். மக்கள் அனைவரும் அலெக்ஸாண்டரை விட டயோஜனிஸிடமே மிகுந்த மதிப்பு வைத்திருந்தனர். இதனால், 'போர்களினால் இந்த உலகத்தையே வென்ற, வீரம் நிறைந்த என்னைவிட, டயோஜனிஸ் எந்த விதத்தில் உயர்ந்தவர்' என்ற வினா அலெக்ஸாண்டருக்கு எழுந்தது. விடை கிடைக்காமல் குழம்பி, அவரிடமே கேட்டுவிடலாம் என்று முடிவு செய்து, ஒரு நாள் அவரைச் சந்தித்து, 'மக்கள் என்னைவிட உங்களை அதிகமாக மதிப்பது ஏன்?' என்று கேட்டார். அதற்கு டயோஜனிஸ், 'அலெக்ஸாண்டர்! நீ மண்ணை வென்றவன். நான் என்னை வென்றவன். அதுதான் காரணம்' என்றார். எனவேதான். 'புலன் ஐந்தும் வென்றான் தன் வீரமே வீரம்' என்றார் ஔவையார்.

மனிதனாய் பிறந்த ஒவ்வொருவருக்கும் புலனடக்கம் என்பது பிரதானமான விதி. அது இல்லாதபோது எந்த தர்மத்தையும் காப்பாற்ற இயலாது. மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்புலன்களும்தான் ஆசைகள் தோன்றும் களம். இவை கட்டுப்பாட்டில் இல்லாதபோது மனிதனுக்குத் தீவிரமாகப் பேராசையை ஊட்டக்கூடிய சாதனங்களாகவே விளங்குகின்றன. எனவே நமது பெரும்பாலான துன்பங்களுக்குக் காரணம் புலன்களை முறையாக இயக்கத் தெரியாததே ஆகும். மனிதனின் மனம்தான் மூளையின் மூலம் ஐம்புலன்களையும் இயக்குகிறது. ஐம்புலன்களும் சில நேரத்தில் மூளையையும், மனதையும் சோர்வடையச் செய்துவிடும். மனதின் ஆளுமைத் திறன் மேலோங்கி இருக்கும் போது, ஐம்புலன்களும் அதற்குக் கட்டுப்பட்டு நடக்கிறது. மன வலிமை சிதைந்து பலவீனமாகும் போது, புலன்களின் ஆதிக்கம் மேலோங்கிவிடுகிறது. இதனால் கட்டுப்பாடு இல்லாமல் தன்னிச்சையாக செயல்பட்டு, உடல் உணர்வுகளின் அடிப்படையில் சுகபோக வெறியில் நம்மை நாட்டங்கொள்ளச் செய்கின்றன. இதனால் மனிதன் உயர்வான எண்ணங்களையும், லட்சியங்களையும் சிந்திக்காமல் காலின் கீழே போட்டு மிதித்து துவம்சம் செய்துவிட்டு, வெறும் சபலங்களால் தாக்கப்பட்டு தாழ்மையெனும் பள்ளத்தில் வீழ்ந்து அழிந்துப்போகிறான். எனவே நம் ஐந்து புலன்களையும் மரணதேவனின் இருப்பிடங்களான 'பஞ்சத்வம்' என்கிறது விவேக சூடாமணி.

நம் புலன்களை ஆட்டுவிப்பது நமக்குள் இருக்கும் அசுர மனம். அதை அங்கும் இங்கும் அலையவிடாமல், ஒரு நிலையில் பொருந்தச் செய்வதே யோகம் ஆகும். தமிழில் 'யோகம்' என்றால் 'பொருந்துதல்' என்று பொருள். மனம் எதைச் சிந்திக்கிறதோ, அதனுடன் முற்றாகப் பொருந்தி விடுவதே யோகம். மனம் செயலில் பொருந்தும்வரை தியானம் பழக வேண்டும். மன ஒருமைதான் யோகத்தின் அடிநாதம். இதனால் மனச் சமநிலைக் கைவரப்பெற்று, செயல் திறன் அதிகரிக்கும். பிறகு இன்பம் தரும் மயக்கமும், துன்பம் தரும் கலக்கமும் இல்லாமல் போய்விடும். பேரின்பப் பெருவாழ்வு பிறக்கும். எதையும் துணிந்து செய்து சாதிக்கலாம்.

புலனடக்கம் பற்றி வள்ளுவர்,

*ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்*
*எழுமையும் ஏமாப்பு உடைத்து*

என்கிறார். ஆமை தன் நான்கு கால்கள், ஒரு தலை ஆகிய ஐந்து உறுப்புகளையும் ஆபத்து வரும்போது ஓட்டுக்குள் மறைத்துக்கொள்வது போல, ஒருவன் தன் ஒரு பிறப்பில் ஐந்து பொறிகளையும் அறத்திற்கு மாறான, ஆன்ம நலனுக்குப் பயன் தராத சிந்தனை, செய்தி, செயல்களில் ஈடுபடுத்தாமல் அடக்கும் ஆற்றல் பெறுவான் என்றால், அது அவனுக்கு ஏழு பிறவியிலும் அரணாக இருந்து உதவும்.

புலனடக்கம் என்பது அவற்றை வேலை செய்யாமல் அடக்குவது என்று அர்த்தமல்ல. போகங்களை அனுபவிக்காமல் இருப்பதன் மூலம் புலனடக்கம் ஏற்படாது. அத்தகைய சுகங்களில் மூழ்கிப்போவதால் விளையும் நஷ்டத்தைப் புரிந்துகொண்டு, புலன்களை சரியான நெறியில் இயங்கச் செய்வதே அறிவுடைய செயலாகும். எனவேதான் திருமூலர்,

*அஞ்சும் அடக்குஅடக்கு என்பர் அறிவிலார்*
*அஞ்சும் அடக்கும் அமரரும் அங்கில்லை*
*அஞ்சும் அடக்கிய அசேதனமாம் என்றிட்டு*
*அஞ்சும் அடக்கா அறிவு அறிந்தேனே*

என்கிறார். அதாவது, 'ஐந்து பொறிகளையும் அடக்கு என்று வலியுறுத்துபவர்கள் எதுவும் அறியாதவர்கள். ஐந்தும் அடக்கிய தேவர்கள் அங்கே வானுலகிலும் இல்லை. ஐந்து பொறிகளையும் அடக்கிவிட்டால் நாம் சடப்பொருள் போல் ஆகிவிடுவோம் என்பதை உணர்ந்து, அடக்காமல் இருக்கும் அறிவை அறிந்து கொண்டேனே!' என்று குறிப்பிடுகிறார்.

ஐந்தறிவு விலங்குகள் புலன்களின் உணர்சியால் தூண்டப்பட்டு, உண்கின்றன; காலம் இடம் பாராமல் கல்விக் கொள்கின்றன. ஆனால் ஆறறிவு படைத்த மனிதனுக்கோ வாழ்வில் சுய ஒழுக்கமும், லட்சியங்களும் உள்ளன. எனவே இன்பம் நாடுவதே அவனது ஒரே நோக்கமாக இருந்தால் விலங்கினின்று அவன் வேறுபட்டவன் அல்ல. புலனக்கம் இல்லாததால் இன்று இளமையிலேயே பலர் சிற்றின்பச் சிலந்தி வலையில் சிக்கிச் சீரழிகின்றனர். மகாத்மா காந்தி சாதாரண மோகன்தாஸ் கரம்சந்தாக இருந்தபோது, காமக் கணைகளால் காயப்பட்டவர்தான். பின்னாளில் கடுமையாகப் பிரம்மச்சரிய விரதமேற்ற அவர், 'காகிதத்தைத் தொடும்போது என்ன உணர்ச்சி இருக்குமோ, அதே போன்றுதான் ஒரு பெண்ணைத் தொடும்போதும் மனம் அமைதியாகவும், சலனம் இல்லாமலும் இருக்க வேண்டும்' என்று மொழிந்தார்.

கடிவாளம் இல்லாத குதிரை கண்ட திசையில் ஓடுவதுபோல, புலன்கள் கட்டுப்பாட்டில் இல்லாமல் போனால், அவை நம் உடலையும், உயிரையும் அழித்துவிடும். எனவேதான் விவேகானந்தர், "ஆன்மிக வாழ்க்கைக்கோ, மனதுக்கோ, உடலுக்கோ பலவீனத்தை உண்டுபண்ணும் எதையும் உன் கால்விரலாலும் தீண்டாதே" என்கிறார். புலன்களின் பசி புலன்களையே தின்று விடுவது அநியாயமானது. 'புலன்களை வசப்படுத்த முதலில் மனத்தை வசப்படுத்த வேண்டும்' என்கிறது விதுரநீதி. மனவலிமை இருந்தால் மட்டுமே புலன்களை முறையாகத் தேவைக்கேற்ப பயன்படுத்த முடியும். எனவே, புலன்கள் வழியே செயற்படும் மனதை மீட்டு, அதைப் புலன்களை வழிநடத்தும் மனதாக மாற்ற வேண்டும்.

வசந்தம் வீசும்...

## 2-4-2021 பெரிய வெள்ளிக்கிழமை திருச்சடங்கு தொடங்க தேவையான முன்னுரை

அணிலாடி SL. ஜோசப்.

பிறப்பிலே பூத்த வெள்ளி
மறைந்ததோ பெரியவெள்ளி!
வெள்ளித்தகடு வரலாறுகூற
வெள்ளிக் காசுகள்
மனிதனாய் வந்த கடவுளுக்கு
மதிப்பு இதுதான் என்று பேச....
வெள்ளிப் பாத்திரங்கள் கவிழ
விரத நாளாய் நிற்கிறது
இக்கிழமை வெள்ளி...

ஆண்டிலே துக்கநாள்
ஆண்டவர் மரித்த நாள்.
உருண்டோடும் பந்தில்
ஒட்டிக் கொள்ளும் மணலைப் போல்
சிலகாலம் வாழ்ந்தப்பின்
சிதறித் தள்ளப் படுகிற மனிதனே!
இன்று ஒரு சோகத்தை
கொண்டாட வந்திருக்கிறீர்கள்.

இன்பவனத்தில்
வாக்களிக்கப்பட்ட "சொல்"
இத்துன்ப வனத்தில் - வந்தது
வாழ்க்கையழிக்கப்பட்ட "கொல்"
சதா பிதாவின்
சர்வதேச எதிரி பிசாசுடன்
மகனை அனுப்பி
மற்போரிட அனுப்பியநாள்
உலகப்பார்வையில் - இயேசு
இறந்ததாகத் தெரியும்
ஆனால்...

அந்த 33 மணி நேரத்தில்
பரலோகம்
பூலோகம் கடந்து
நரலோகத்தில் நடந்த யுத்தம்
நசரேத்தூராரின் உடம்பில்
வடிந்தது ரத்தம்.
யூதாசின் ஒரு முத்தம்
வந்திரக்கியது ஒரு யுத்தம்
இதெல்லாம் பிதாவின் சித்தம்.

ஏடுகள் தாங்கா பாடுகள்
இயேசய்யா பெற்றார்
புதுமைகள் புதினங்கள்!
அடுக்கடுக்காய் மிடுக்காய் நிற்க!
சாட்டைகளும் ஈட்டிகளும்
வாட்டுவனவாய் தாக்க
உப்பிட்டவனுக்கு
உயிர் பறிக்கலாமா?

ஆளுநர் பிலாத்துதான்
ஆண்டவர் இயேசுவுக்கு
முதற் கோவிலை
கல்வாரி மலையில் கட்டினான்.

செத்தும் கொடுத்தார்
சேசுநாதர்,
ஒற்றைக்கண்ணுடன் - இயேசுவின்
விலாவை குத்தியவன்
இரட்டை கண்களுடன்
ஈட்டியை இழுத்தான்.

மரணத்தைத் தழுவினார் - இயேசு
தாம் முற்றிலும் மனிதன் என்பதற்காக
தருணத்தை எதிர்ப்பார்த்திருந்தார்
தாம் தெய்வம் என்று காட்டுவதற்காக
நாம் சிலுவையை வணங்குவோம்
அதை நம் வலுவாக்குவோம்.

## மூன்று மரங்கள்

**(ஓர் அமெரிக்க நாட்டுப் புறக்கதை)**



**திரு. ஜெயராஜ் தானியேல்,**
முத்தியால்பேட்டை, புதுவை-3

மூன்று மரங்கள் தங்கள் எதிர்காலம் குறித்து கனவு காணத் தொடங்கின.

முதல் மரம், "நான் ஒரு பொக்கிஷப் பெட்டியாவேன். வைரங்களும் வைடூரியங்களும் மணிரத்தினங்களும் என்னில் நிரப்பப்படும்" என்றது.

இரண்டாவது மரம், "ஆர்ப்பரிக்கும் கடல் மீது செல்லும் கப்பலாவேன். பராக்கிரமம் பொருந்திய மன்னர்கள் என் மீது பயணம் செய்வார்கள்" என்றது.

மூன்றாவது மரம், "நான் மிகவும் உயரமாக வளருவேன். என்னை அண்ணாந்து பார்க்கும் மக்கள் வான்வீட்டில் உள்ள கடவுளை நினைத்துப் பார்ப்பார்கள்" என்றது.

ஆண்டுகள் பல உருண்டோடின. செழிப்பாக வளர்ந்திருந்த மூன்று மரங்களும் ஒரு நாள் வெட்டிச் சாய்க்கப்பட்டன.

முதல் மரம் ஒரு கால்நடைத் தீவனப் பெட்டியாக்கப்பட்டது.

இரண்டாவது மரம் ஒரு படகாக ஏரியில் மீன் பிடிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டது.

மூன்றாவது மரத்தை நீண்ட சட்டங்களாக வெட்டி ஒரு மரக்கிடங்கில் வைத்து விட்டார்கள்.

காலப்போக்கில் அந்த மூன்று மரங்களும் தத்தமது கனவுகளை மறந்து போயின. ஒரு நாள் இரவு வானத்தில் மின்னிக் கொண்டிருந்த விண்மீன்கள் அந்த முதல் மரத்தால் செய்யப்பட்ட தீவனப் பெட்டியில் ஜொலித்துக் கொண்டிருந்தன. ஓர் அழகான இளம்பெண் தான் பிரசவித்த குழந்தையை அந்தக் கால்நடைத் தீவனப்பெட்டியின் மீது கிடத்தினாள். அப்பொழுது, உலகிலேயே மிகச்சிறந்த பொக்கிஷத்தைத் தாங்கிக் கொண்டிருப்பதை உணர்ந்தது முதல் மரம்.

மற்றொரு நாள் மாலை வேளையில் களைப்புற்றிருந்த பயணி ஒருவரும் அவருடைய நண்பர்களும் அந்த இரண்டாவது மரத்தால் செய்யப்பட்ட மீன்பிடிப் படகில் ஏறினர். களைப்புற்றிருந்த பயணி அயர்ந்து தூங்கிப்போனார். படகும் ஏரியில் பயணத்தைத் தொடர்ந்தது. திடீரென சூறாவளிக் காற்று வீச படகு தள்ளாடியது. அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த பயணி தூக்கம் கலைந்து எழுந்து நின்று தன் கைகளை விரித்து "இரையாதே" என்று சொல்ல சூறாவளிக் காற்று அமைதியுற்றது. அப்பொழுது, விண்ணுக்கும் மண்ணுக்கும் உரிய மன்னரைச் சுமந்து கொண்டிருப்பது புரிந்து மகிழ்ந்தது இரண்டாவது மரம்.

அன்று வெள்ளிக்கிழமை. காலை வேளை. மூன்றாவது மரம் திடுக்கிட்டது. வெறித்தனமாகக் கத்திக் கொண்டிருக்கும் கூட்டத்தினரிடையே அதைத் தூக்கிச் சென்றார்கள். போர் வீரர்கள் ஒரு மனிதனின் கைகளை தன் மீது விரித்து ஆணியால் அறைவதை நடுக்கத்துடன் பார்த்தது. ஆனால், ஞாயிற்றுக்கிழமை காலை சூரியன் உதித்தபோது பூமி மகிழ்ச்சியில் குலுங்கியது. அப்பொழுது மூன்றாவது மரம் இறைவனுடைய இரக்கம் அனைத்தையும் மாற்றிவிட்டதை உணர்ந்தது. இந்த மூன்றாவது மரத்தை மக்கள் நினைக்கும் பொழுதெல்லாம், இறைவனுடைய அன்பை உணர்ந்தார்கள்.

"ஏனெனில் உங்களுக்காக நான் வகுத்திருக்கும் திட்டங்கள்... வளமான எதிர்காலத்தையும் நம்பிக்கையையும் உங்களுக்கு அளிப்பதற்கான நல்லாழ்வின் திட்டங்களே அன்றி, கேடு விளைவிப்பதற்கான திட்டங்கள் அல்ல என்கிறார் ஆண்டவர்." (எரேமியா 29:11).

5

# புனித வளனாரின் பாதுகாவல்கள் (Patronages)

அருள்திரு.M.**லூர்து ஜெயசீலன்**,
பங்குத்தந்தை, வடலூர்.



**புனித வளனார் ஆண்டு செபம்**
**மீட்பருடைய பொறுப்பாளரே வாழ்க**

"யோசேப்பு அம்மகனுக்கு இயேசு என்று பெயரிட்டார்" (மத்1/25). யூதச் சமூகத்தில் குழந்தைக்குப் பெயரிடுதல் என்பது குழந்தைகளுக்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ளுதல் என்பதைக் குறிக்கும். மேலும் புனித வளனாரிடம் கடவுள் தமது ஒரே மகனையே ஒப்படைத்தார். அவரும் அதனை முழு மனதோடு ஏற்றுக்கொண்டார் என்பதையே இந்தப் பெயரிடுதல் நமக்கு உணர்த்துகின்றது.

### 1. கடவுளின் தண்டனையும், வாக்குறுதியும்

ஆதிப்பெற்றோர் ஆதாமும் - ஏவாளும் கடவுளின் கட்டளையை மீறிப் பாவம் செய்தபோது கடவுள் அவர்களைத் தண்டிக்கின்றார். அதே நேரத்தில் மனித குலத்தை மீட்பதற்கான வாக்குறுதியையும் கொடுக்கின்றார். "உனக்கும் பெண்ணுக்கும் உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன். அவள் வித்து உன் தலையைக் காயப்படுத்தும் நீ அதன் குதிங்காலைக் காயப்படுத்துவாய்" என்றார (தொநூ 3/15). தொடக்கத்திலேயே கடவுள் தம் மகனை அன்னை மரியா வழியாகப் பிறக்கச் செய்வேன் என்ற வாக்குறுதியைக் கொடுக்கின்றார். அதனை காலம் வந்தவுடன் நிறைவேற்றுகின்றார். அதனையே புனித பவுலடிகளாரும் "காலம் நிறைவேறியபோது கடவுள் தம் மகனைப் பெண்ணிடம் பிறந்தவராக அனுப்பினார்" (கலா 4/4) என்று கூறுகின்றார்.

### 2. அன்னை மரியாவின் பொறுப்பாளர்

மனிதர்களை மீட்க இறைமகன் இயேசு மனிதவுரு எடுக்க வேண்டும் என்பது இறைவனின் திட்டம். சிறப்பாக அன்னை மரியா வழியாக இயேசு பிறக்கவேண்டும் என்பதும் இறைவனின் திட்டம். அன்னை மரியா இறைவனின் திட்டத்திற்கு "நான் ஆண்டவரின் அடிமை: உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" என்று சொல்லி கீழ்ப்படிந்தது உண்மையாகவே அன்னை மரியாவின் மேன்மையே. இத்தகையச் சிறப்பு வாய்ந்த நமது தாய் மரியாவை இறைவன் புனித வளனாரின் பொறுப்பில் ஒப்படைத்தார். வானத்தூதரை இறைவன் மரியாவிடம் அனுப்புவதற்கு முன்பாகவே மரியாவை புனித வளனாரிடம் ஒப்படைத்தார் என்பதை லூக்கா நற்செய்தியில் வாசிக்கிறோம். "அவர் தாவீது குடும்பத்தினராகிய யோசேப்பு என்னும் பெயருடைய ஒருவருக்கு மன ஒப்பந்தமானவர். அவர் பெயர் மரியா" (லூக் 1/27). எனவே புனித வளனார் மீட்பரின் பொறுப்பாளராக மாறுவதற்கு முன்பே மரியாவின் பொறுப்பாளராகிறார். மரியாவை ஏற்றுக்கொள்கிறார்; மரியாவை இறைத் திட்டப்படி வழிநடத்த சம்மதிக்கின்றார். புனித வளனார் அன்னை மரியாவின் மீட்புத் திட்டத்தில் தனது முழுப் பொறுப்பை நிறைவேற்ற அவரின் பொறுப்பாளராக இருந்து உதவி செய்கின்றார்.

### 3. மீட்பரின் பொறுப்பாளர்

அன்னை மரியா கருவுற்றிருப்பது தூய ஆவியால் என்பதை புனித வளனார் கனவின் மூலம் அறிந்து அவரை ஏற்றுக்கொள்கிறார். "யோசேப்பு தூக்கத்திலிருந்து விழித்தெழுந்து ஆண்டவரின் தூதர் தமக்குப் பணித்தவாறே தம் மனைவியை ஏற்றுக்கொண்டார்" (மத் 1/24). அவர் அன்னை மரியாவை ஏற்றுக்கொள்ளும் போதே ஆண்டவர் இயேசுவையும் ஏற்றுக்கொள்கின்றார், மீட்பரின் பொறுப்பாளராகிறார். அதைத்தான் திருத்தந்தை புனித இரண்டாம் ஜான் பால் மீட்பரின் பாதுகாவலர் (Redemptoris Custos) என்ற மடல் மூலம் அறிவித்தார். அன்னை மரியாவுக்கும், ஆண்டவர் இயேசுவுக்கும் பொறுப்பாளராகிறார் என்றால் இயேசு ஏற்படுத்திய திருச்சபைக்கும் பொறுப்பாளராகிறார். அதனால்தான் திருத்தந்தை 9ம் பத்திநாதர் புனித வளனார் திருச்சபையின் பாதுகாவலர் என்று அறிவித்தார். திருச்சபையின் பாதுகாவலர் என்றால் அவர் திருச்சபை முழுவதிலும் உள்ள இறை மக்களின் பாதுகாவலராகிறார்.

### 4. இறைமக்களின் பொறுப்பாளர்

புனித வளனார் நமது பொறுப்பாளராகிறார். இந்த ஆண்டினை புனித வளனார் ஆண்டாக அறிவித்ததன் மிக முக்கியமான நோக்கம் இறைமக்களை இந்த கொரோனா நோய்த் தொற்று நேரத்தில் புனித வளனாரின் பாதுகாவலில் ஒப்படைக்க வேண்டும் என்பதே என்று திருத்தந்தை பிரான்சிஸ் தனது மடலில் கூறியுள்ளார். எனவே புனித வளனார் உலக முழுவதிலும் உள்ள அனைத்து இறை மக்களின் பொறுப்பாளராகிறார்

### 5. மீட்பரின் பொறுப்பாளரே வாழ்க என்று செபிக்கும் போது

- புனித வளனாரைப் போல் இறைமக்கள் இறைத் திட்டத்தை அறிந்து அதனை முழுமையாக ஏற்றுக்கொள்ளவேண்டும்.
- எத்தகைய அசாதாரணச் சூழலிலும் புனித வளனாரைப் போல் இறைவன் மீது அசைக்க முடியாத நம்பிக்கையை இறைமக்கள் வைக்கவேண்டும்.
- கொரோனாவுக்கு எதிரான செயல்பாட்டில் மறைமுகமாக பணியாற்றும் துப்புரவுப் பணியாளர்கள், செவிலியர்கள் அனைவரும் புனித வளனாரைப் போல எந்தவிதமான எதிர்பார்ப்பும் இல்லாமல் பணியாற்றவேண்டும்.
- பல்வேறு இக்கட்டானச் சூழலிலும் புனித வளனார் அன்னை மரியாவையும், ஆண்டவர் இயேசுவையும் பாதுகாத்ததைப் போல மருத்துவர்களும் மக்களைப் பாதுகாக்க வேண்டும்.
- மறைமுகப் பணியாளர்களான Store keepers, Super market workers, Caregivers, Transport workers மற்றும் தன்னார்வலர்கள் அனைவரும் புனித வளனாரைப் போல மறைமுகமாக இந்தப் பெருந்தொற்று காலத்தில் அர்ப்பணிப்பு உணர்வோடு பணிசெய்ய வேண்டும்.
- குருக்கள், இருபால் துறவிகள் மற்றும் திருச்சபையில் உள்ள அனைத்து விதமானப் பணியாளர்களும் இறைமக்களுக்கான ஆன்மீகக் கடமைகளை புனித வளனாரைப் போல இறைத்திட்டப்படி இந்த நாட்களில் செய்யவேண்டும்.
- புனித வளனார் அன்னை மரியாவையும், ஆண்டவர் இயேசுவையும் பொறுப்பாக பார்த்துக்கொண்டதைப் போல் நாம் ஒவ்வொருவரும் நமது தாயையும், தந்தையையும், உடன்பிறப்புகளையும், உறவிர்களையும், நண்பர்களையும் பொறுப்போடு பார்த்துக்கொள்ள வேண்டும்.

# இரண்டு யோசேப்பு (ஒப்புமை)

அருள்திரு. L. ஆரோக்கியதாஸ்,
உதவி பங்குத்தந்தை, பேராலயம், புதுவை.



சமீபத்தில் படித்த ஒரு கவிதை "நேர்மை என்பது ஒரு போதை அதை பழகிக் கொண்டால் விடுவது கடினம்." யாக்கோபின் மகனான பழைய ஏற்பாட்டு யோசேப்பு, மரியாவின் கணவரான புதிய ஏற்பாட்டு யோசேப்பு ஆகிய இருவரும் எல்லா நேரங்களிலும் நேர்மையாளர்களாக இருந்தனர். அவர்களுடைய நேர்மையைப் பற்றி இப்பகுதியில் சிந்திப்போம்.

**பழைய ஏற்பாட்டு யோசேப்பு:**

1) தொநூ 37:2 -ல் யோசேப்பு தன் சகோதரர்கள் தந்தைக்குத் தெரியாமல் செய்த தவற்றை தன் தந்தைக்குத் தெரியப்படுத்துகிறார். இது ஏதோ புறங்கூறுவதுபோல் தோன்றினாலும் யோசேப்பு செய்தது நேர்மையான செயலே ஆகும். சகோதரர்கள் அனைவரும் சேர்ந்து தவறு செய்தபோதும், யோசேப்பு அவர்களோடு சேரவில்லை.

2) யோசேப்பு கடவுள் தனக்கு கனவில் வெளிப்படுத்தியதை அப்படியே தன் சகோதரர்களிடமும், தந்தையிடமும் கூறினார். அவர் வேண்டுமென்றே தன் சகோதரர்களும், பெற்றோர்களும் தனக்கு அடிபணிய வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு கூறவில்லை. யோசேப்பின் சகோதரர்கள் அவரை வெறுத்தபோதும் அவர் அவர்களை வெறுக்காமல், எகிப்தில் அவர்களை பழிவாங்க வாய்ப்பு இருந்த போதும் அவ்வாறு செய்திடாமல் நேர்மையாளராய் இருந்தார்.

3) போத்திபாரின் வீட்டில் யோசேப்பு இருந்தபோது, வீட்டுப் பொறுப்புகள் அனைத்தையும் அவரிடம் ஒப்படைத்தான். யோசேப்பும் மிக மிக நேர்மையாக நடந்துகொண்டார். குறிப்பாக போத்திபாரின் மனைவி யோசேப்பிடம் தவறாக நடந்துகொள்ள முயன்றபோதும் அவர் அதற்கு இணங்காது நேர்மையாளராக இருந்தார் (தொநூ 39:13).

4) சிறையில் அடைக்கப்பட்ட போதும் அனைத்து அலுவல்களும் யோசேப்பின் மேற்பார்வையில் விடப்பட்டன. அங்கும் அவர் நேர்மையாளராகத் திகழ்ந்தார் (தொநூ 39:23).

5) கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து எகிப்தின் ஆளுநராக உயர்ந்தபோதும் மக்களுக்கான தனது நிர்வாகத்தில் மிக மிக நேர்மையாக வாழந்தார். யோசேப்பு எந்த அளவிற்கு அதிகாரத்தில் உயர்ந்தாரோ அந்த அளவிற்கு நேர்மையிலும் உயர்ந்தார்.

**புதிய ஏற்பாட்டு யோசேப்பு:**

1. யோசேப்பைப் பற்றி விவிலியத்தில் சொல்லப் படுகின்ற ஒரே வார்த்தை "நேர்மையாளர்" என்பதாகும்.

"அவர் கணவர் யோசேப்பு நேர்மையாளர். அவர் மரியாவை இகழ்ச்சிக்கு உள்ளாக்க விரும்பாமல் மறைவாக விலக்கிவிடத் திட்டமிட்டார்" (மத் 1:19).

2. பழைய ஏற்பாட்டு யோசேப்புக்கு தன் சகோதரர்களைப் பழித்தீர்க்க பல வாய்ப்புக்கள் இருந்தது போன்று, கூடிவாழும் முன்பே கருவுற்ற மரியாவை தண்டிக்கவும், பழித்தீர்க்கவும் புதிய ஏற்பாட்டு யோசேப்புக்கு நிறைய வாய்ப்புக்கள் இருந்தன. ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை. காரணம், அவர் நேர்மையாளராக இருந்தார்.

3. மேலும் உரோமைத் திருப்பலி நூலில் "நேர்மையாளராகிய அவரைக் கடவுளின் தாயாகிய கன்னிமரியாவுக்குக் கணவராகத் தந்தருளினீர்" என்று செபிக்கிறோம். (திருப்பலி நூல், புனிதர் சிறப்புப் பகுதி மார்ச் 19 மற்றும் மே 1).

4. "இவர் தச்சரின் மகன் அல்லவா?" என்று இயேசுவை சொல்லும் அளவுக்கு யோசேப்பு மக்களால் அறியப்பட்டிருந்தார் என்றால் அதற்கு அவர் தனது தச்சுத்தொழிலில் கடைபிடித்த நேர்மையே ஆகும். (மத் 13:55).

***"நேர்மையாளர் ஆண்டவரில் அகமகிழ்வர், அவரிடம் அடைக்கலம் புகுவர் - திபா 64:10)***


## மிஷன் அச்சக வெளியீடுகள்
## புதிய புத்தகங்கள் தற்போது விற்பனையில் உள்ளன



இறைவனின் அன்னையின்
அற்புதமான வரலாறு
**எடுத்து வாசி பாகம் - I**
ஆசிரியர் :
Bro. K.பெர்னார்டு, SFO
விலை: 150.00

**இளம் உள்ளங்களுக்கு**
ஆசிரியர்:
திரு.B.மேரி ராபர்ட் சாந்திதாஸ்



விலை:
100.00




**Rev.Sr.BASTILLE PIERRE**
(France, ST.JOSEPH CLUNY)

மண்ணில் மலர்ந்தது:
**15-01-1943**
விண்ணில் மலர்ந்தது:
**08-04-2020**

### விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவு

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவர் எவரும் இறப்பினும் வாழ்வார்" (யோவான்.1 1:25)

இரக்கம் மிகுந்த இனிய
இயேசுவே நிலையான
பேரின்பத்தின் தூய ஒளியே,
எங்கள் உள்ளங்களிலே
நிறைந்து வாழ்ந்து
கொண்டிருக்கும் அருள்சகோதரி
BASTILLE PIERRE அவர்களின்
முதலாம் ஆண்டு நிறைவுறும்
இன்று அவர்களுக்கு நித்திய
இளைப்பாற்றியை அருள்வீராக.
– ஆமென்.

பிரிவால் துயருறும்
பஸ்தீல் குடும்பத்தினர்
பிரான்ஸ்

158 இளம் உள்ளங்களுக்கு

## இயேசுவை கண்டு பிடித்தேன்



– B.*மேரி ராபர்ட் சாந்திதாஸ், புதுவை–1.*

**வரலாறு படைத்தவர்கள்:** உலக வரலாற்றில் பல்வேறு காலக்கட்டங்களில் பல மாமனிதர்கள் தோன்றி மனித மேம்பாட்டுக்காக பல துறைகளிலும் அரும்பெருங்காரியங்களை ஆற்றியுள்ளார்கள். அவர்களுள் சிலர் தத்துவ ஞானிகள், சிலர் ஆன்மிகவாதிகள், சிலர் கலைஞர்கள், சிலர் அறிவியல் ஆராய்ச்சியாளர்கள், மற்றும் சிலர் மருந்துவர்கள்.

**Dr. Sir James young Simpson:** 1811ல் ஸ்காட்லாந்தில் பிறந்த டாக்டர் சர் ஜேம்ஸ் யங் சிம்ஸன் ஒரு தலைச்சிறந்த மகப்பேறு மருத்துவ நிபுனர். அவர் வாழ்ந்த காலம் வரை குழந்தைப் பேற்றின்போது தாங்கமுடியாத வ-யை தாங்கிதான் ஆகவேண்டும். அறுவை சிகிச்சையின் போதும், போரில் படுகாயம் அடைந்து உடல் உறுப்புகளை வெட்டியெடுக்கும்போதும் அவர்கள் படும் கொடிய வேதனை நெஞ்சை பதபதக்கவைக்கும். இத்தகைய வ- தெரியாமல் சிகிச்சை அளிக்க முடியாதா என்று பலமாக சிந்திக்கலானார் டாக்டர் சிம்சன்.

**விவி-யம் தந்த ஞானம்:** டாக்டர் சிம்சன் விவி-யம் படிக்கும் பழக்கமுடையவர். ஒரு நாள் தொடக்க நூலை மீண்டும் வாசித்தபோது அதிகாரம் 3.21ல் உள்ள வசனம் அவர் கவனத்தை பெரிதும் ஈர்த்தது: "ஆண்டவராகிய கடவுள் மனிதனுக்கு முதல் மனிதன் ஆதாமுக்கு ஆழ்ந்த உறக்கம் வரச் செய்து, அவன் உறங்கும்போது அவன் விலா எலும்பு ஒன்றை எடுத்து பெண்ணை (முதல் பெண் ஏவாள்) உருவாக்கினார்," இந்த வரி - "ஆழ்ந்த உறக்கம் வரச்செய்து" அவர் மனதில் ஆழமாகப் பதிந்து அவரை மீண்டும் மீண்டும் சிந்திக்கத் தூண்டியது.

**சிம்சனின் கண்டு பிடிப்பு:** அவர் சிந்தனையை விரைவிலேயே செயலாக்கினார். க்ளோரோஃபார்ம் (Chloroform) என்ற மயக்க மருந்தைக் கண்டுபிடித்தார். 1847ல் சிம்சன் முதன் முத-ல் க்ளோரோஃபார்ம்-ஐ வ-யால் துடிக்கும் மகப்பேறு மகளிருக்கு கொடுத்து அவர்களை வ- வேதனையின்றி குழந்தைகளைப் பெற்றெடுக்கச் செய்தார். இவரது கண்டுபிடிப்பை மருத்துவ உலகமே வியந்து பாராட்டியது. இந்தக் கண்டுபிடிப்பின் மூலம் நோயாளிகள் வ- உணர்வற்ற நிலையில் அறுவை சிகிச்சை செய்துகொண்டு நலமடைய முடிந்தது.

**இயேசுவைக் கண்டு பிடித்தேன்:** சிம்சனின் புகழ் பார் எங்கும் பரவத் தொடங்கியது. ஒருமுறை சிம்சனை ஏராளமான பத்திரிக்கையாளர்கள் சூழ்ந்து கொண்டு, "நீர் கண்டுபிடித்த கண்டுபிடிப்புகளிலேயே மிகச் சிறந்தது எது?" என்று வினவினார்கள். அவர்கள் அவர் க்ளோரோஃபார்ம்-ஐ தான் சொல்லுவார் என்று எதிர்ப்பார்தார்கள். ஆனால் சிம்சன், "இயேசுவைக் கண்டுபிடித்ததுதான் தனது கண்டுபிடிப்புகளிலேயே மிகவும் மகத்தானது" என்றார்.

**சிந்திப்பீர்:** நம்முடைய தினசரி வாழ்வில் இயேசுவைக் கண்டுணர நமக்கு அனேக அரிய சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றன. ஆனால் நாம் சந்தர்ப்பத்தை நழுவவிட்டுவிட்டு உலக காரியங்களால் திசை திரும்பி ஏமார்ந்து போகிறோம்.


## தூய லூர்து அன்னை திருத்தலம், ஆண்டுத் திருவிழா

**வில்-யனூர்.**

**கொடியேற்றம்** 10-04-2021 சனிக்கிழமை

**திருவிழா** 18-04-2021 ஞாயிற்றுக்கிழமை

**அனைவரும் வாரீர்**

**அன்னையின் ஆசி பெற்று செல்வீர்.**

இவண், திருத்தல அதிபர்


## விண்ணக வாழ்வின் 16ஆம் ஆண்டு நினைவு



திரு. **அந்துவான் பெரியநாயகசாமி**

**Rtd Militraite**

**தோற்றம்: 15-01-1927**

**மறைவு: 14-04-2005**

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" யோவான்.11:25

**ஜெபம்**

நித்திய ஒளியின் தூய்மையாகிய இயேசுவே! ஆன்மாக்களை இரட்சிக்கின்றவரே! உமது கட்டளைப்படி வாழ்ந்த இவரின் ஆன்மாவை உமது அருளால் மன்னித்து ஏற்று, விண்ணகப் பேரின்பத்தில் சகல புனிதர்களின் கூட்டத்தில் முடிவில்லா வாழ்வில் என்றும் திளைத்திருக்கும் பேற்றை இவருக்கு அருள்வீராக. - ஆமென்.

– *கர்.மங்.திரி.*

பிரிவால் துயருறும்

**மனைவி, மகன், மருமகள், மகள்கள், மருமகன்கள், பேரப்பிள்ளைகள், கொள்ளுப்பேரப்பிள்ளைகள்**

**மற்றும் உறவினர்கள்.**

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 14-4-2021 செவ்வாய்க்கிழமை காலை 6.15 மணிக்கு முத்தியால்பேட்டை, புனித ஜெபமாலை அன்னை ஆலயத்தில் திருப்ப- நிறைவேற்றப்படும்.

## விண்ணக வாழ்வின் 2–ஆம் ஆண்டு நினைவு

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவர் எவரும் இறப்பினும் வாழ்வார்" (யோவான்.11:25)

**தோற்றம்: 05-11-1960**



**மறைவு: 20-04-2019**

திரு. **அருள்தாஸ் மசேனா** (பிரான்ஸ்)

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 20-04-2021 புதன்கிழமை காலை 6.15 மணிக்கு முத்தியால்பேட்டை, புனித கார்மேல் மடம் சிற்றாலயத்தில் நிறைவேற்றப்படும் திருப்ப-யில் அவரது ஆன்மா நித்திய பேரின்பம் அடைய செபிப்போம்.

பிரிவால் துயருறும்

**மனைவி, மகன்கள், மகள், தாய், சகோதரர்கள், சகோதரிகள் உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள்.**

**பிரான்ஸ்.**

# விண்ணக வாழ்வின் நினைவு அஞ்சலி



திரு. அருமைதுரை (எ) மீல் பெர்தினான் கட்சிராயர்
மலர்ந்தது : 31-07-1909
உதிர்ந்தது : 22-04-1972

திருமதி. ஆரோக்கியமரி கட்சிராயர்
(W/o. Late. மீல் பெர்தினான் கட்சிராயர்)
மலர்ந்தது : 30-08-1924
உதிர்ந்தது : 05-02-2006

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - யோவான்.11:25

**இறைவா! தங்கள் வாழ்க்கையில் இறை வார்த்தையின்படி நடந்து "உண்மையான முறையில் உழைத்து முன்னேற வேண்டும்" என்கிற உன்னதமான கருத்தை எங்களுக்கு கற்றுத் தந்த எங்களது அன்புப் பெற்றோர் திரு. அருமைதுரை [எ] மீல் பெர்தினான் கட்சிராயர், திருமதி. ஆரோக்கியமரி கட்சிராயர் அவர்களுக்கு நித்திய இளைப்பாற்றியைத் தந்தருளும், ஆமென்.-** *கர்.மங்.திரி.*

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 22-04-2021 வியாழக்கிழமை காலை 6.00 மணிக்கு நெல்-த்தோப்பு, புனித விண்ணேற்பு அன்னை ஆலயத்திலும் மாலை 6.00 திரு இருதய ஆண்டவர் பசி-க்காவில் நிறைவேற்றப்படும் திருப்ப-யில் கலந்துகொண்டு செபிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

அவர்கள் பிரிவால் துயருறும் மகன்கள்
**கிளமெண்ட் ஜோசப் கட்சிராயர்
ஹென்றி கட்சிராயர்,
தொன்போஸ்கோ கட்சிராயர்
மற்றும் மருமகள்கள், மகள்கள்,
மருமகன்கள், பேரப்பிள்ளைகள்,
கொள்ளுப்பேரப்பிள்ளைகள்.**
புதுவை.

---

## விண்ணக வாழ்வின் 11-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்: 26-4-1934



மறைவு: 15-04-2010

**Mr.A.Xavier Arputham**
(Retd. Commissioner, T.R.Pattinam, Karaikal)

உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார் - யோவான்.11:25

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 15-4-2021 வியாழன் மாலை 5.30 மணிக்கு புனித ஜென்ம ராக்கினி அன்னை பேராலயத்திலும், 18-04-2021 ஞாயிறு காலை 8.00 மணிக்கு *T.R.* பட்டினம், தூய பிரான்சிஸ் சவேரியார் ஆலயத்திலும், நிறைவேற்றப்படும் திருப்ப-யில் பங்குகொண்டு செபிக்க கேட்டுக்கொள்கிறோம்.

**பிரிவால் மீளாத் துயருறும்
மனைவி: ழனேத் சேவியர்**
மகள்கள், மருமகன்கள்,
மருமகள், பேரப்பிள்ளைகள்
மற்றும் உறவினர்கள்.

---

## விண்ணக வாழ்வின் 4-ம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்: 24-05-1946



இறப்பு: 02-04-2017

அணிலாடி
**L.அடைக்கலமரிநாதன்** M.A.,M.Ed.
ஆசிரியர்

அன்புள்ள அப்பா! ஆண்டு நான்கு ஆனாலும்
என் தொலைதூர தேடல் நீதானே!
கடிதம் வரையும் கலைஞனே அணிலாடியின்
அடைக்கலமே! - நீ
செஞ்சி கல்லறையிலும் அடைக்கலமே!
இயேசு இறந்ததால் வெள்ளியும் புனிதமானது!
ஞாயிறும் புனிதமானது அப்பா நீ நீர்த்ததாலே!
உன் இறப்பு நாளில் ஆண்டவர் இயேசுகூட
இறப்பார் - அன்று புனித வெள்ளியாக!
இயேசுவோடு உயிர்ப்பாயோ அப்பா!

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 2-4-2021 வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு, செஞ்சி, புனித மிக்கேல் ஆலயத்தில் திருப்ப- நிறைவேற்றப்படும்.

பிரிவால் துயருறும்
**மனைவி, பிள்ளைகள், மற்றும் குடும்பத்தினர்.**

---

## விண்ணக வாழ்வின் 35-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்: 01-09-1922



இறப்பு: 04-04-1986

**ஆன்ரியேத் தங்கம்மாள் செல்வராஜூ**
Henriette Thangammal Selvaradjou (Née Sandjivy)

**அவர்களின் ஆன்மாவிற்கு நித்திய இளைப் பாற்றியையும், முடிவில்லா விண்ணக வாழ்வையும் அளித்தருளும்.** *-கர்.மங்.திரி.*

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 4-4-2021 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு, புதுவை ஜென்மராக்கினி அன்னை பேராலயத்தில் நிறைவேற்றப்படும் திருப்ப-யில் பங்குகொண்டு வேண்டிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**பிரிவால் மீளா துயருறும்
மகன்கள், மகள்கள், மருமகள்,
பேரப்பிள்ளைகள்,
கொள்ளுப்பேரப்பிள்ளைகள்,
மற்றும் குடும்பத்தினர்.**

---

**இவ்விதழில் வெளியிடப்பட்டுள்ளோரின் ஆன்மாக்களுக்காக சர்வவியாபி வாசகர்களால் சிறப்பாக செபிக்கப்படுகிறது.**

## 50-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

பிறப்பு: 26-11-1915



இறப்பு: 16-6-1971

## Mr. DEROCK Joseph Louis André

**S/o. DEROCK Mariassoucé**

## 17-ஆம் வருட நினைவு அஞ்சலி

பிறப்பு: 20-6-1928



இறப்பு: 04-04-2004

## Mrs. DEROCK MARY THERESA

**W/o. DEROCK Joseph Louis André**

## செபம்

**இறைவா, எங்கள் குடும்பத்தின் தூண்களாய் திகழ்ந்து, அன்பின் வடிவாய் எங்களைப் பேணிக்காக்க பல தியாகங்களைச் செய்து, வாழ்க்கையின் முன்னேற்றப் படிகளில் எங்களை ஏற்றிவிட்டு, உமது முடிவில்லா ஆட்சியில் சமாதானத்தில் இளைப்பாற, உம்முடைய வான்வீட்டிற்கு உம்மால் அழைத்துக் கொள்ளப்பட்ட எங்கள் பெற்றோர்கள் திரு. DEROCK Joseph Louis André திருமதி. DEROCK Mary Thérèsa அவர்களிருவரின் ஆன்மாவுக்கு நித்திய இளைப்பாற்றியை அளிக்க மன்றாடுகிறோம், ஆமென்.**

**CHERS PARENTS - NOUS VOUS AIMONS TRES FORTS-LES ENFANTS**

**4-4-2021 ஞாயிறு காலை 6.30 மணிக்கு, புதுச்சேரி புனித ஜென்ம ராக்கினி மாதா பேராலயத்திலும், காலை 6 மணிக்கு நெல்லித்தோப்பு, விண்ணேற்பு அன்னை ஆலயத்திலும், காலை 5.30 மணிக்கு திரு இருதய ஆண்டவர் ஆலயத்திலும், காலை 6.30 மணிக்கு, ரெட்டியார்பாளையம் புனித அந்திரேயா ஆலயத்திலும், திருப்பலிகள் நிறைவேற்றப்படும். அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

பிரிவால் துயருறும்

## மகன்கள், மகள்கள், மருமகன்கள், மருமகள்கள்,
## பேரப்பிள்ளைகள், கொள்ளுப்பேரப்பிள்ளைகள்,
## மற்றும் குடும்பத்தினர்.

25

# கிறிஸ்தவக் குறியீடுகளும் அடையாளங்களும்

அருள்பணி. **A.ஆரோக்கியராஜ்,** - முதல்வர், விரியூர்.

## திருப்ப-- அடையாளங்கள்

**தீர்த்தம்:**



ஞாயிற்றுக் கிழமைகளில் பாவமன்னிப்பு வழிபாட்டில் தீர்த்தமானது பயன்படுத்தப் படுகின்றது. "நான் தூய நீரை உங்கள் மேல் தெளிப்பேன்; நீங்கள் உங்கள் எல்லா அழுக்குகளி-ருந்தும் தூய்மையாவீர்கள்" (எசே. 36:25) "ஈசோப்பினால் என்னைக் கழுவியருளும்; நான் தூய்மையாவேன். என்னைக் கழுவியருளும்; உறைபனியிலும் வெண்மையாவேன்". (திபா.51:7) இது பாவங்களி-ருந்து நம்மை தூய்மையாக்கும் சடங்கு. நீர் தூய்மைப்படுத்தக்கூடியது, உப்பு கெட்டுப் போகாமல் பாதுகாக்கக்கூடியது. திருச்சபை இவை இரண்டையும் இணைத்து திருவழிபாட்டில் பாவத்தினின்று நம்மைக் கழுவி, மீண்டும் பாவத்தில் திளைத்திடா வண்ணம் நம்மைப் பாதுகாக்க இச்சடங்கினை பயன்படுத்துகின்றது.

தீர்த்தம் தெளித்தல் என்பது பாவமன்னிப்பு வழிபாட்டின் ஒரு பகுதி. மேலும் இது திருமுழுக்கை நினைவூட்டுகின்றது. எனவே இதனைத் திருப்ப-யின் தொடக்கத்தில் நிறைவேற்ற வேண்டும். திருப்ப-யின் முடிவில் செய்வது மக்களுக்கு ஆசீர் அளிப்பதின் அடையாளமாகவும் பாதுகாப்புக்காகவும் அமையும். ஆனால் தீர்த்தத்தின் முக்கிய நோக்கமாகிய தூய்மையாக்கல் என்பது பாவமன்னிப்பு வழிபாட்டைச் சார்ந்தே அமைகிறது. எனவே திருப்ப-யின் தொடக்கத்தில் இச்சடங்கைச் செய்வதை உறுதி செய்ய வேண்டும்.

**தலை வணங்குதல்:**



பொதுவாக ப-பீடத்தைக் கடந்து செல்லும் போதும், திரு உருவங்களையோ, திருப்படங்களையோ அல்லது திருப்பண்டங்களையோ கடந்து போகும்போதும் தலை வணங்குகிறோம். அவ்வாறு தலை வணங்குவது என்பது அந்தப் பொருட்களுக்கு அல்ல மாறாக அவை எவரின் அல்லது எவற்றின் அடையாளங்களாக இருக்கின்றனவோ அவர்களுக்குச் செலுத்தும் வணக்கம் ஆகும்.

'உன்னதங்களிலே' கீதம் பாடும் போது இயேசுவின் பெயரை இருமுறை கூறுகின்றோம். அவ்வாறு கூறும்போது, அனைவரும் தலைவணங்கி பயபக்தியுடன் இயேசுவின் பெயரைக் கூறுகின்றோம். இது 1274 ஆம் ஆண்டு திருத்தந்தை 10ம் கிரகோரியால் அவர்களால் கூட்டப்பட்ட லையோன்ஸ் நகர இரண்டாம் சங்கத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. இது புனித சின்னப்பர் (பி- 2:9-11) ல் "இயேசுவின் பெயருக்கு விண்ணவர், மண்ணவர், கீழுலகோர் அனைவரும் மண்டியிட இயேசு கிறிஸ்து ஆண்டவர் என எல்லா நாவுமே அறிக்கையிடும்" என்று கூறுகின்றார். தலைவணங்குவது என்பது (GIRM) அந்த நபருக்கு நாம் அளிக்கும் மரியாதையை குறிக்கின்றது. இதில் இருவகை உண்டு.

**சாதாரண தலை வணங்குதல்:**

தலையை மட்டும், தாடைப்பகுதி கழுத்தின் அடிப்பகுதியை தொடுமாறு வணங்குதல்.

1. ஆலயத்தை கடந்து செல்லும்போது இயேசுவின் பிரசன்னத்திற்கு மரியாதை செலுத்த;

2. இயேசு என்னும் பெயரை உச்சரிக்கும்போது, (கிறிஸ்து என்பது ஆகுபெயர் எனவே தலை வணங்கத் தேவையில்லை)



3. குருவானவர் பீடத்திற்கு வரும்போதும், மீண்டும் திருப்ப-முடிந்து செல்லும் போதும்;

4. தந்தை, மகன், தூய ஆவியார் மூவரின் பெயரை ஒன்றாக உச்சரிக்கும்போதும் இவ்வாறு செய்கிறோம்.

**ஆத்மார்த்த வணக்கம்:** (Profound bow)

இடுப்பு வரை $30^{o}$ வளைந்த நிலையில் நின்று வணங்குதல்.

1. தீர்த்தம் தெளிக்கையில் (ஈசோப்பினால் தெளிக்கையில்).

2. பீடச்சிறுவர் மக்கள் கூட்டத்திற்கு தூபமிடுகையில்

**உட்காருதல்**

ஆசிரியரின் போதனைக்கு செவி மடுக்கும் சீடனின் நிலையே அமர்ந்து கேட்டல். திப 20:9, பவுல் போதிக்கும் போது யூத்திகு என்ற இளைஞர் பலகனியில் உட்கார்ந்திருந்ததாக அறிகிறோம். 1 கொரி 14:36-இறைவாக்கினர் போதிக்கும்போது மற்றவர் அமர்ந்து கேட்டனர். இது ஓய்வுக்கான நேரம் அல்ல மாறாக கவனமாகக் கேட்பதன் நிலை.

அறிவோம் தொடர்ந்து

**Published and Printed by Very Rev. Msgr. A. Arulanandam on behalf of Most Rev. Dr. A. ANANDARAYAR,** D.D.,D.C.L., Archbishop of Pondicherry & Cuddalore. Printed at Mission Press, 196, Cathedral Street, Puducherry - 605 001. Published from Mission Press, 196, Cathedral Street, Puducherry-605 001. Editor: **Very Rev. Msgr. A. Arulanandam.** Manager : **Very Rev. Msgr. A. Arulanandam.**